எண் 104 **செய்தி வெளியீடு** நாள் 29.11.2023

இன்று (29.11.2023) காலை சுமார் 7 மணி அளவில் கொரட்டூர் மின் தடை மைய தொலைபேசிக்கு எண்.7, 3வது குறுக்கு தெரு, ஜம்புகேஸ்வரர் நகர், கொரட்டூர், சென்னை ஈஸ்வரன்கோவில் எதிரில் உள்ள ஸ்ரீ துர்கா இண்டஸ்டீரீஸ், அருகில் ஒரு நபர் மின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக செய்தி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து மின் தடை நீக்க பணியாளர்கள் அங்கு விரைந்து, ஸ்ரீ துர்கா இண்டஸ்டீரீஸ் அருகில் உள்ள 500 KVA ஜம்புகேஸ்வரர் நகர் SS I மின்மாற்றியை மின் துண்டிப்பு செய்தனர்.

மின் தாக்குதலுக்கு உள்ளானவர் திரு. சம்பத் குமார், வயது சுமார் 55, அரசு வழக்கறிஞர் (முன்னாள் மாமன்ற உறுப்பினர்) என அறியப்பட்டது.அன்னார் நடை பயிற்சிக்கு சென்று கொண்டிருந்த பொழுது மழைக்காக ஸ்ரீ துர்கா இண்டஸ்டீரீஸ் முன்புறம் தகர கூரைக்கு அடியில் ஒதுங்கியிள்ளார். ஸ்ரீ துர்கா இண்டஸ்டீரீஸ் மின் இணைப்பு மீட்டர் உள்ள சுவர் முழுவதும் மழையின் காரணமாக ஈரமாக இருந்ததால் மின் கசிவு ஏற்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த இரும்பு தகடுகளில் மின்சாரம் தொடர்பு ஏற்பட்டது. மின் தாக்குதலுக்குள்ளான நபர் அந்த தகடுகளின் மீது நின்றதால் மின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

அதன் பின்னர் ஸ்ரீ துர்கா இண்டஸ்டீரீஸ் உரிமையாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவரின் வருகைக்கு பின்னர் ஸ்ரீ துர்கா இண்டஸ்டீரீஸ் திறக்கப்பட்டு அவரின் மின் இணைப்பில் உள்ள பியூஸ் கேரியர் அகற்றப்பட்டு, வெல்டிங் தொழிற்சாலையிலிருந்து கசிந்த மின்சாரம் நிறுத்தப்பட்டு, மின் கசிவு ஏதும் இல்லையென உறுதி செய்யப்பட்டது.இதனை தொடர்ந்து மின்மாற்றி இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டது.

மின் வாரிய ஊழியர்கள் உடனடியாக விரைந்து எவ்வித மெத்தனமுமின்றி தங்கள் பணியை மேற்கொண்டுள்ளார்கள். மேற்கண்ட விபத்து ஏற்பட்ட இடத்தை ஆய்வு செய்தபோது, மின் விபத்து தொழிற்சாலையிலிருந்து (ஸ்ரீ துர்கா இண்டஸ்டீரீஸ்) கசிந்த மின்சாரத்தால் தான் ஏற்பட்டுள்ளதாக ஆய்வில் தெரியவருகிறது. இவ்விபத்திற்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை.

**வெளியீடு: இணை இயக்குநர்/ம.தொ, த.ந.மி.உ.ம.ப.க, சென்னை –2.**